**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 15/2024 P.W .1**

Name: முத்துலெட்சுமி Husband's Name : அழகிரிசாமி
Village: Taluk :
Age : Occupation :
Religion:

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.08.2024

எதிரி ஆஜர்

-----------------------------------------------------------------------------------------------------

22.08.2024

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்

கடந்த 22.11.2023ம் தேதியிட்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி , காரைக்குடி கிளை, **காசோலை (காசோலை எண் 343399 அசல் ம.சா.ஆ.1)** ஆகும். கடந்த 23.011.2023 அன்று ம.சா.ஆ. 1 காசோலை kindly contact drawer Drawee Bank and please present again என்ற காரணத்திற்காக திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.2 ஆகும்.** கடந்த 28.11.2023–ம் தேதியன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ 3 ஆகு**ம். மேற்படி ம.சா.ஆ.3 அறிவிப்பை 05.12.2023 அன்று எதிரி பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் அசல் ம.சா.ஆ.4)** ஆகும். மேற்படி ம.சா.ஆ.3 அறிவிப்பை 05.12.2023 அன்று எதிரி பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் அசல் ம.சா.ஆ.5)** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

1) நான் தொழில் எதுவும் செய்யவில்லை. கடந்த ஒருவருடமாக எந்த வேலையும் பார்க்கவில்லை. அதற்கு முன்பு வீட்டு வேலை பார்த்து வந்தேன். மாத வருமானம் ரூ. 15

ஆயிரம். எதிரியை எப்படி தெரியும் என்றால் எங்கள் வீட்டிற்கு பால் ஊற்ற வருவார் அதன் மூலம் தெரியும். எதிரி வழக்கு கடனை எதற்கு கேட்டார் என்றால் வீடு கட்டுவதற்காக கேட்டார். நான் எனது புகார், வழக்கறிஞர் அறிவிப்பு , போன்றவற்றில் எதிரி வீடு கட்டுவதற்காகாத்தான் கடன் வாங்கியதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சரிதான். ரூ. 5 லட்சம் வாங்கினார். ரூ. 5 லட்சம் கடன் வாங்கியதாக எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். ம.சா.ஆ. 3 ஆவணத்தில் எதிரி என்னிடம் ரூ. 3 லட்சம் கடன் வாங்கியதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் ரூ. 2 லட்சத்து 50 ஆயிரத்தை கொடுத்துவிட்டார். அதில் 50 ஆயிரம் வட்டி காசாகும். பாக்கி ரூ. 3 லட்சம் கொடுக்கவேண்டும்.

2) எதிரி என்னிடம் கொடுத்திருந்த எதிரியின் வீட்டு பத்திரத்தை வைத்துதான் என்னிடம் பணம் வாங்கினார். பின்னர் அதை ஏமாற்றி என்னிடம் இருந்து வாங்கிசென்றுவிட்டார். அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு ரூ. 5 லட்சம் கடன் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியை பூமிநாதன் என்பவரிடம் அறிமுகம் செய்து அவரிடம் இருந்து ரூ. 5 லட்சம் கடன் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி கடனை 2018ம் வருடம் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கடனை தனியார் நிறுவனத்தில் ரூ. 3 லட்சம் கடன் வாங்கி பூமிநாதன் என்பருக்கு எதிரி காசோலை மூலம் செலுத்திவிட்டார் என்றால் சரிதான். பாக்கி தொகையை ரூ. 2 லட்சத்தையும் எதிரி கட்டி முடித்துவிட்டு அசல் பத்திரத்தை பூமிநாதனிடம் இருந்து திரும்ப பெற்றுகொண்டார் என்றால் சரியல்ல.

3) பூமிநாதனிடம் பெற்ற கடனிற்கு எதிரியின் கணவர் எழுதிக்கொடுத்த ஆதரவு பத்திரம் என்னிடம் உள்ளது. மேற்படி 50 ரூபாய் ஆதரவு பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். பூமிநாதனிடம் வாங்கிய கடனிற்காகத்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் கணவர் பூமிநாதன் என்பவரிடம் 2018ம் வருடம் ரூ. 5 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக எதிரியின் பெயரில் உள்ள வீட்டு பத்திரம் மற்றும் ம.சா.ஆ– 1 ஆவணம் அதன் தொடர்ச்சியாக 2 காசோலைகளை பொறுப்பிற்கு கொடுத்து கடன்

பெற்றுள்ளார். மேற்படி கடனை 2019ம் வருடம் காசோலை மூலமாக ரூ. 3 லட்சமும், பாக்கி தொகைகளை ரொக்கமாக பூமிநாதன் என்பவரிடம் கொடுத்து முடித்துவிட்டார் நான் எதிரியையும் அவரது கணவரையும் பூமிநாதனுக்கு அறிமுகம் செய்து மேற்படி கடனை பூமிநாதனிடம் வாங்கி கொடுத்ததால் அதற்கு உரிய கமிஷன் தொகை தராததால் தாவா வழக்கு காசோலையை பூமிநாதனிடம் வாங்கி எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) எனக்கு ரூ. 3 லட்சம் கடன் கொடுப்பதற்கு எந்த வசதியும் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரியை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது மனு, நிரூபண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளதுபோல் எதிரி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பணம் கொடுத்த மறுநாள் ஆதரவு பத்திரம் எழுதிக்கொடுத்தார். 50 ரூபாய் பத்திரத்தில் எதிரியோ, எதிரியின் கணவரோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, **B.Sc.**, **B.L.**, (**Hon's**))
விரைவுநீதிபதி, காரைக்குடி.